Kerala Gazette No. 31 dated 1st August, 2017.

**PART I** **Section iii**

# கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-சி) துறை

அறிக்கை

எண் 4712/ச. இ. சி. 3/2015/சட்டம். திருவனந்தபுரம், 2015 ஆகஸ்ட் 3 / 1190 கும்பம் 18/ 1937 சிராவணம் 12.

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொது மக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2015 ஆகஸ்ட் 3ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைத்தது.

ஆளுநரின் ஆணைப்படி,

எஸ். குமாரி சுதா,
சிறப்புச் செயலாளர் (சட்டம்).

2015-ன் சட்டம் எண் 13

## 2015-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) திருத்தச்சட்டம்

1974-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்குரிய ஒரு சட்டம்.

முன்னுரை.—1974-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) சட்டம் பின்வரும் தேவைகளுக்காக மேலும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஆறாவது ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:—

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்தச்சட்டம் 2015-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) திருத்தச் சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது 1984, மே 1-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. பிரிவு 3எ-ல் திருத்தம்.—1974-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) சட்டத்தின் (இதற்குப் பிறகு முதன்மைச்சட்டம் என்று அழைக்கப்படும் பிரிவு 3எ-ன் துணைப்பிரிவு (1)-ல்,—

(i) "மூன்று மாத காலயளவிற்கு குறையாமல் மூடப்படும்" என்ற சொற்களுக்கு பிறகு "இந்த சட்டம் அமலுக்கு வரும் தேதிக்கு முன்போ அல்லது அதற்கு பின்வரும் எந்த நாளும்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) இந்த காப்பு வாசகத்தில் "சட்டப்பேரவையின் தீர்மானம்" என்ற சொற்களுக்குப் பிறகு "இந்த பிரிவின், துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஆணை வெளியிடப்பட்ட தேதி முதல் ஆறு மாத காலயளவிற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற சொற்களும் எண்களும் அடைப்புக் குறியீடுகளும் சேர்க்கப்பட வேண்டும்.

(iii) காப்பு வாசகத்திற்கு பிறகு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது,—

"விளக்கம்.—துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைக்கு ஏற்றவாறு நிலையான அத்தகைய உத்தரவு வெளியிடப்படும் தேதியில் அமலுக்கு வரும்.".

2. பிரிவு 6எ-யை சேர்த்தல்.—முதன்மைச்சட்டத்தின் பிரிவு 6-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது,—

"6எ. அட்டவணை III-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை ஏற்றெடுத்தல்.—(1) ஏதேனும் நீதிமன்றத்தினுடையவோ அல்லது தீர்ப்பாயத்தினுடையவோ பிற அதிகார குழுமத்தினுடையவோ ஏதேனும் தீர்ப்பிலோ ஆணையிலோ உத்தரவிலோ என்னதான் அடங்கியிருந்தாலும், தற்போது அமுலில் உள்ள பிற ஏதேனும் சட்டத்திலோ ஒப்பந்தத்திலோ பிற ஒப்பந்த பத்திரத்திலோ என்னதான் அடங்கியிருந்தாலும், இந்த சட்டத்தின்

அட்டவணை III-ல் குறிப்பிடப்பட்டுள்ள முந்திரி ஆலை தொழிற்சாலை ஒவ்வொன்றிற்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் அமல்படுத்தப் பட்டு அரசிற்கு கைமாற வேண்டியதும் அதில் பொதுவிருப்பத்திற்கு ஏற்றபடி இருக்கும் என்றும் இதனால் அறிக்கை செய்யப்படுகிறது.

எனில் அவ்வாறான கைமாறுதல், 2015-ன் கேரள முந்திரி ஆலை தொழிற்சாலைகள் (ஏற்றெடுத்தல்) திருத்தச் சட்டம் அரசிதழில் வெளியிடப்படும் தேதி முதல் ஆறுமாத காலயளவிற்குள் சட்டப்பேரவையால் இயற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் பின்துணையுடன் இருக்க வேண்டியதாகும்.

(2) சட்டத்தின் பிரிவு 4-லும் பிரிவுகள் 7 முதல் 16 வரையுள்ள (இரண்டும் உட்பட) நிபந்தனைகள் பிரிவு 3எ துணைப்பிரிவு (1)-ன்படி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ள முந்திரி ஆலை தொழிற்சாலை சம்மந்தப்பட்டுள்ளதும் அல்லது முடிந்த அளவிற்கு பாதகமாவதுமாகும்.

(3) இந்த சட்டத்தின் தேவைகளுக்காக, ஒரு தொழிற்சாலை தொடர்பாக "நிச்சயிக்கப்பட்ட நாள்" என்றால் அட்டவணையில் ஒவ்வொரு தொழிற் சாலைக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இருக்கும் என்று சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் இதனால் அறிக்கை செய்யப்படுகிறது.

(4) பிரிவு 8-ன் துணைப்பிரிவு (1)-ன்கீழ் வெளியிடப்பட்ட எல்லா உத்தரவுகளும் உட்பட அட்டவணை III-ல் குறிப்பிடப்பட்டுள்ள முந்திரி ஆலைகள் தொடர்பாக, அரசோ ஏதேனும் அதிகாரியோ, அதிகார குழுமமோ செய்ததாகவோ எடுத்ததாகவோஆன எல்லா செயல்களும் நடவடிக்கைகளும் அல்லது காரியங்களும், அவை ஒவ்வொன்றிற்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் அன்று முதல் ஆரம்பிப்பதும், 2015-ன் கேரள முந்திரி ஆலைகள் (ஏற்றெடுத்தல்) திருத்த சட்டம் அரசிதழில் வெளியிடப்படும் தேதியில் முடிவடையவும் செய்கின்ற காலயளவுகளில், இந்தச்சட்டத்தில் மேற்கூறிய திருத்த சட்டம் வாயிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த நேரங்களிலும் அமலில் இருப்பது போல எல்லா தேவைகளுக்கும் வாய்ப்புள்ளதும் அமலில் உள்ளதுமாக இருப்பதும் எல்லா நேரத்திலும் அவ்வாறு இருப்பதாகவும் கருதப்பட வேண்டியதாகும்.".

4. <u>பிரிவு 9-ற்கான திருத்தம்.</u>—பிரிவு 9-ல் துணைப்பிரிவு (7)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும், அதாவது,—

"(8) தற்போது அமலில் உள்ள பிற ஏதேனும் சட்டத்திலோ ஏதேனும் நீதிமன்றமோ தீர்ப்பாயமோ அல்லது பிற அதிகார குழுமமோ வெளியிட்ட ஏதேனும் தீர்ப்பிலோ உத்தரவிலோ, ஆணையிலோ என்னதான்

அடங்கியிருந்தாலும், இதில் அடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப நிச்சயிக்கப்பட்ட தொகை ஒரு முந்திரி ஆலையின் உரிமையாளரோ, கைவசம் வைத்திருப்பவரோ பெற்றுக்கொள்ளும்போது, 1882-ன் சொத்து கைமாறுதல் சட்டத்தின் (1882-ன் 4-வது மத்திய சட்டம்) பிரிவு 54-ல் நிர்வகித்துள்ள ஒரு கைமாறுதல் ஆவணம் கையெழுத்திட்டு பூர்த்திகரிப்பதன் வாயிலாக முந்திரி ஆலைகளை அரசிற்கு கைமாறுதல் செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டிய தும் அதன்படி கைவசம் வைத்திருப்பவருடையவோ உரிமையாளரினுடையவோ உரிமையும், உரிமையாளர் உரிமையும், விருப்பமும் இழப்பீட்டுத் தொகை மற்றும் தேதி முதல் முடிவடைவதுமாகும்.

(9) துணைப்பிரிவு (8)-ல் குறிப்பிடப்பட்டுள்ள கைமாறுதல் நடைபெற்றுள்ளது எனில் ஆலையின் கைவச உரிமையும் உரிமையாளர் உரிமையும் கைவசகாரருக்கு வைத்திருக்கு/உரிமையாளருக்கு திரும்ப அளிப்பதற்கு அரசு கடமைப்பட்டிருக்காது.".

5. அட்டவணை III-யை சேர்த்தல்.—முதன்மை சட்டத்தின் அட்டவணை ii-ற்குபிறகு பின்வரும் அட்டவணை சேர்க்கப்பட வேண்டும், அதாவது,—

## அட்டவணை III

(பிரிவு 6எ காணவும்)

| வரிசை எண் | ஆலையின் பதிவு எண் | ஆலையின் பெயர் மற்றும் விவரங்கள் | அரசிடம் ஒப்படைக்கப் பட்ட தேதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | கெ. யு. 28 | கொல்லம் மாவட்டத்தில் கொட்டாரக்கரை தாலுக்காவில் மேலில கிராமத்தில் செங்கும நாட்டில் நிலைகொள்ளும் எம்/எஸ் கிராண்ட் முந்திரி ஆலை வாரியம் | 11-5-1984 |
| 2 | கெ. யு. 96 | கொல்லம் மாவட்டம் கொல்லம் தாலுக்காவில் கிளிகொல்லூர் கிராமத்தில் நிலைகொள்ளும் எம்/எஸ் கெ.எ.கரீம் அன்ட் சன்ஸ், கிளிகொல்லூர் | 11-5-1984 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | க்யு. 38 | கொல்லம் மாவட்டத்தில் கொல்லம் தாலுக்காவில் இரவிபுரம் கிராமத்தில் நிலை கொள்ளும் எம்/எஸ் பி.கெ. தாமோதர் முந்திரி ஆலை, இரவிபுரம் | 27-7-1984 |
| 4 | க்யு. 97 | கொல்லம் மாவட்டம் கொல்லம் தாலுக்காவில் சாத்தனூர் கிராமத்தில் நிலை கொள்ளும் எம்/எஸ் குயிலோண் எக்ஸ்போர்ட்ஸ், சாத்தனூர் | 27-7-1984 |
| 5 | க்யு. 150 | திருவனந்தபுரம் மாவட்டத்தில் சிறையின்கீழ் நாவாயிக்குளம் கிராமத்தில் நிலை கொள்ளும் எம்/எஸ் தனலட்சுமி எக்ஸ்போர்ட்ஸ், நாவாயிக்குளம் | 27-7-1984 |
| 6 | கெ. யு. 59 | கொல்லம் மாவட்டத்தில் கொல்லம் தாலுக்காவில் பெரிநாடு கிராமத்தில் நிலை கொள்ளும் எம்/எஸ் ராஜஸ்ரீ எக்ஸ்போர்ட்ஸ் எண்டர்பிரைசஸ், பெரிநாடு | 27-7-1984 |
| 7 | கெ. யு. 207 | கொல்லம் மாவட்டத்தில் கொல்லம் தாலுக்காவில் கிளிகொல்லூர் கிராமத்தில் நிலைகொள்ளும் எம்/எஸ் விஸ்வநாத் முந்திரி ஆலை, சாதிநம்குளம் | 8-2-1985 |
| 8 | கெ. யு. 185 | கொல்லம் மாவட்டத்தில் கொல்லம் தாலுக்காவில் கோட்டகரை கிராமத்தில் நிலைகொள்ளும் எம்/எஸ் டால்மியா இன்டர்நேஷனல் பெரும்புழை | 8-2-1985 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 9 | எ. பி. 9 | ஆலப்புழ மாவட்டத்தில் கார்த்திகப்பள்ளி தாலுக்காவில் பத்தியூர் கிராமத்தில் நிலை கொள்ளும் எம்/எஸ் ஸ்டான்டேர்ட் முந்திரி ஆலை, பத்தியூர் | 25-4-1985 |
| 10 | எ. பி. 11 | ஆலப்புழை மாவட்டத்தில் கார்த்திகப்பள்ளி தாலுக்காவில் காயம்குளம் எருவயில் நிலை கொள்ளும் ராஜ்மோகன் காஸ்யூ லிமிட்டேட், எருவ. | 11-6-1986 |